[1979 பிப்ரவரி 14

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, பெரியசோலை பகுதிகள் தொகுதியின் கடைகோடியில் இருப்பதால், இங்குள்ள பிரச்னைகளைப் பற்றி அதிகாரிகள் போய் கவனிப்பதில்லை. இதைப்பற்றி நான் நீண்ட காலமாகச் சொல்லிக் கொண்டு வருகிறேன். நான் இந்தக் கேள்வியைப் போட்டு, கிட்டத்தட்ட 6 மாதங்கள் ஆகின்றன. அந்தப் பகுதி மக்கள் குடிநீர் வசதி யில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறுர்கள். எனவே இதை உடனடியாக பரிசீலிக்க முன்வர வேண்டுமென்றும், அப்படி பரிசீலிக்க இந்த அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: என்னுடைய பதிலிலேயே இது பரிசீலனையில் உள்ளது என்று கூறியிருக்கிறேன்.

புது ஆயக்குடி-வரதாப்பட்டினம் சாலை

*வினா எண். 50—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம், புது ஆயக்குடியிலிருந்து வரதாப் பட்டினம் செல்லும் சாலை கடந்த 15 ஆண்டு காலமாக எவ்வித மராமத்தும் இல்லாமல் போக்குவரத்துக்கு லாயக்கற்று கிடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் செப்பனிட அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) ஆம்.

(ஆ) இப்பணியை பின்வரும் ஆண்டுகளில் இதர சாலைகள் திட்டத்தின் கீழ் நிதி நிலைமை மற்றும் பணியின் முதன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு எடுத்துக் கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புது ஆயக்குடி வரதாப்பட்டினம் சாலை என்பது மிகவும் முக்கியமான சாலை. இந்தச் சாலைக்கு ஜில்லா போர்டு காலத்தில் மெட்டல் போடப்பட்டது. அதற்குப் பின்னர் வந்த எந்த அரசும் இந்தச் சாலையைப் பற்றி கவனிக்கவே இல்லை. ஆனுல், இது போக்குவரத்துக்கு மிகமிக முக்கியமான சாலையாக இருக்கின்றது. ஆகவே, இந்தச் சாலையை தற்போது கொடைக்கானலிலிருந்து, பழனிக்கு வரும் வரதாமுத்து அணை வழியாக பழனிக்குக் கொண்டு வந்தால் வசதியாக இருக்கும். அதோடு, கொடைக்கானலிலிருந்து பழனிக்கு வரும் தற்போதைய சாலை தண்டாயுதபாணி சுவாமி கோவிலுக்கு வரும் தெரு வீதியைத் தொடுவதால், அங்கு வரக்கூடிய பக்தர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அதற்குப் பதிலாக வரதாமுத்து

1979 பிப்ரவரி 14]

அணையிலிருந்து நேராக 6 கிலோ மீட்டர் தொலைவுக்கு பழனி பஸ் நிலையத்திற்கு கொண்டு வந்தால் மிகவும் வசதியாக இருக்கும். ஏற்கனவே, பொறியாளர்கள் இதைப் பார்த்துச் சென்றிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இதை நிறைவேற்றிக் கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை, ஆய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திட்டையில் உள்ள இரயில்வே பாலம்

*வினா எண். 51—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சையிலிருந்து திட்டை ஆவூர் வழியாக கும்பகோணம் செல்லும் சாலையில் திட்டையில் உள்ள இரயில்வே லோயர் பாலத்தில் தண்ணீர் தேங்கி வருவதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்ற திட்டை புகை வண்டி நிலையத்திற்கு அருகிலுள்ள சுரங்கப்பாதையில் மழை காலங்களில் தேங்கும் நீர் காங்குகளைப் பயன்படுத்தி வெளியேற்றப்படுகிறது. இப்படித் தண்ணீர் தேங்குவதை நிரந்தரமாகத் தடுக்க ஒரு மேம்பாலம் அவ்விடத்தில் கட்டப்பட வேண்டும். இதற்கு சுமார் ரூ. 30 இலட்சம் தேவைப்படும். இதை உடனடியாக மேற்கொள்வது இயலாத காரியம். நிதி நிலைமையைப் பொறுத்து எதிர்காலத்தில் செயல்படுத்துவது பரிசீலிக்கப்படும்.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. அ. செல்லப்பா : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது மழைக் காலத்தில் மட்டுந்தான் தண்ணீர் தேங்குகிறது என்று சொன்னார்கள். போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களே சென்ற ஆண்டு அந்தப் பகுதிக்கு வருகிற நேரத்தில் தண்ணீர் இருந்த காரணத்தால் காரை நிறுத்தி விட்டு தண்ணீரை இறைத்த பிறகுதான் கார் போகக் கூடிய நிலைமை ஏற்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அந்தத் தண்ணீரை அப்புறப்படுத்த வேறு ஏதேனும் வழிவகை செய்வார்களா ?